

அரியலூர் மாவட்ட ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் அரியலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் , மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

### கரூர் மாவட்டத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில்

# அரியலூர் மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக பங்கேற்பு!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பு!

அரியலூர், செப். 15 -

அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் கூட்டம் 11.09.2025 வியாழக்கிழமை மாலை 07.00 மணியளவில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்.

நடைபெற்ற இக்கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்களை விளக்கி தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் உரையாற்றினார்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

கழகத்தலைவர் அவர்கள் லண்டன் ஆக்ஸ் போர்டு பல்கலைகழகத்தில் தந்தைப் பெரியார் அவர்களின் திருவுருவப் படத்தினை திறந்துவைத்து சுயமரியாதை இயக்கம் மற்றும் அதன் மரபுகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியதற்கு வாழ்த்துக்களையும் நன்றியையும் இக்கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

இங்கிலாந்து மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ரூ. 15,516 கோடி மதிப்பிலான புதிய முதலீடுகளை ஈர்த்து தமிழ்நாட்டிற்கு 17,613 புதிய வேலை வாயப்புகளை உருவாக்கி சாதனை படைத்த வாழ்த்துக்களையும், தெரிவித்துக்கொள்கிறது. மாண்பு மிகு கழகத்தலைவர் நன்றியையும் அவர்களுக்கு இக்கூட்டம்

கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி செப்டம்பர்15 அன்று பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று மாவட்டத்தில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பங்கள் கூடி மண்மொழிமானம் காப்பதற்கான உறுதிமொழியை முன்மொழிய வேண்டும். "என் வாக்குச் சாவடி, வலிமையான வாக்குச்சாவடி" என்பதை உணர்த்திடும் வகையில் வாக்குசாவடிக்குட்பட்ட மாநிலமாவட்டஒன்றியநகரபேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணியினர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். நிகழ்ச்சியின் நிழற்படங்கள் (Photos), காட்சிப்படங்களை (Videos) BDAக்கள் வாட்ஸப் குழுக்களில் பதிவிட வேண்டும். அதேபோல அந்தந்த

செயலியில் பதிவேற்ற வேண்டும். தகவல் தொழில்நுட்ப அணி இப்பணியை ஒருங்கிணைக்க வேண்டும். ஒவ்வொரு கூட்டத்திலும் உறுதி மொழி முன்மொழியப்பட வேண்டும். உறுதி மொழி ஏற்பினை BDA கள் புகைப் படம் & வீடியோ எடுத்து தலைமைக்கு அனுப்பி வைத்திட வேண்டும் என இக்கூட்டம் திர்மா னிக்கிறது.

செப்டம்பர்17 அன்று கரூர் மாவட்டத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் அரியலூர் மாவட்டத்திலிருந்து பெருந்திரளாக கலந்து கொள்வது என இக்கூட்டம் திர்மானிக்கிறது.

ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் இணைந்த குடும்பங்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து மாவட்ட அளவில் மாபெரும் பொதுக்கூட்டம் நடத்தவது என இக்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன்,

ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ்,

இரா.மணிமாறன், மா.அன்பழகன், ரெ. சக்கரவர்த்தி, ரெங்க.முருகன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், இரா.அண்ணாதுரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ்.முருகன், இரா. செந்தில்குமார், நகர கழக செயலாளர் இரா.முருகேசன்,

பேரூர் கழக செயலாளர்கள் ப.கோபாலகிருஷ்ணன் அ.அல்போன்ஸ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் வார்டு கிளைக் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# கரூரில் கழக முப்பெரும் விழாப் பணிகள்!

## அமைச்சர் சு.முத்துசாமி – செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. ஆய்வு!

கரூர், செப். 15 –

கரூரில் செப்டம்பர் 17–ஆம் தேதி நடைபெறும் கழக முப்பெரும் விழா மைதானத்தில் நடைபெற்று வரும் பணிகளை அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜியுடன் இணைந்து பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கரூர் கோடங்கிப்பட்டியில் கழக முப்பெரும் விழா செப்டம்பர் 17–ஆம் தேதி பிரம்மாண்ட அளவில் நடைபெற இருக்கிறது. வீட்டு வசதி துறை அமைச்சர் சு.முத்துசாமி, கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம், சட்டமன்ற உறுப்பினர்கள் நிர்வாகிகள் மைதானத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர் அமைச்சர் சு. முத்துசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

செப்டம்பர் 17–ஆம் தேதி கரூரில் நடைபெறும் முப்பெரும் விழா மைதானத்திற்கு எங்களுடைய நிர்வாகிகள் அனைவரும் இங்கே வந்திருக்கிறார்கள். இதற்கு இரண்டு நோக்கம்.

வரும் 17–ஆம் தேதி நடைபெற இருக்கின்ற முப்பெரும் விழாவிற்கு வருகின்ற பொழுது கேள்விப்பட்ட அளவில் பெரிய அளவில் கூட்டம் இருக்கும். எப்படி எங்கள் தோழர்களை அழைத்து வந்து சேர்ப்பது என்பதை முன்கூட்டியே வந்து பார்த்துக் கொள்வது.

இரண்டாவது அடுத்த கூட்டம் நாங்கள் நடத்தும் பொழுது என்னென்னவெல்லாம் செய்ய வேண்டும். இங்கு என்னவெல்லாம் செய்து இருக்கி றார்கள் என்பது இரண்டாவது நோக்கமாக வந்திருக்கிறோம். இரண்டு மூன்று நாட்களாக நாங்கள் கேள்விப்பட்டு கொண்டிருப்பது என்னவென்றால் ஏறத்தாழ 3 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இங்கே வர இருக்கிறார்கள். அந்த அளவுக்கு கூட்டம் வர இருக்கிறது என்பது எங்களுக்கு வருகிற செய்தியாக இருக்கிறது.

முதலிலேயே மூன்று லட்சம் என்கிற பொழுது இன்னும் அதிகமாவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதேபோல முதலில் ஒரு லட்சம் இருக்கைகள் போட ஏற்பாடு செய்திருப்பதாக செந்தில் பாலாஜி அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது இருக்கிற நிலைமையை பார்த்தால் எண்ணிக்கை அதிகமாகும். இருந்தாலும் இட வசதி பெரிய அளவில் இருக்கிறது. மிகப்பெரிய கூட்டம் வரும். இதுபோல முப்பெரும் விழா பெரிய அளவில் நடைபெறுவது அநேகமாக கரூரில் நடைபெறுவது தான் மிகப்பெரும் முப்பெரும் விழாவாக அமையும்.

முதலில் திட்டமிட் டதை விட இன்னும் பெரிய அளவில் கூட்டம் வரும். எங்களுக்கு என்ன பயம் என்றால் கரூர் மாவட்டத்தில் இருப்பவர்களே முதலில் வந்து விடுவார்களே?. நாங்கள் எப்படி வருவது என கேட்டோம். பெரிய அளவில் கார் பார்க்கிங், நுழைவாயில் எல்லாம் முன்னேற்பாடு செய்யப்பட்டி ருக்கிறது. அவர்களோடு இணைந்து எங்களது நிர்வாகிகளும் பணியாற்றுவார்கள். மேடையே ஏறத்தாழ 200 அடிக்கு 60 அடி அளவில் போடப்படுகிறது.

சில கட்சிகளின் கூட்டமே இந்த அளவிற்கு தான் இருக்கும். அந்த அளவுக்கு மேடையே மிகப்பெரிய அளவில் இருக்கிறது. கழக தலைவர் தளபதி அவர்களும் சரி, துணை முதலமைச்சர் அவர்களும் சரி கரூரில் நடத்த வேண்டும் என தேர்வு செய்தது செந்தில் பாலாஜி அவர்கள் சிறப்பாக ஏற்பாடுகள் செய்வார் என்பதுதான். எங்களுக்கெல்லாம் கூட பொறாமையாக இருந்தது.

ஆனால் மிக அருமையாக இங்கே ஏற்பாடுகளை செய்து இருக்கிறார்கள். அவசியம் பெரிய திருப்புமுனையாக முப்பெரும் விழா அமையும். ஏற்கனவே பெரும் வெற்றியை நோக்கி கழகம் சென்று கொண்டிருக்கிறது. இது மேலும் வலு சேர்க்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.



சோழமண்டல கழக காவலர் "கலைஞரின் கண்மணி மறைந்த முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி அவர்களின் 97 வது பிறந்தநாளை முன்னிட்டு ஆடுதுறையில் உள்ள இல்லத்தில் அவரது சிலைக்கு உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர ஒன்றிய பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

### திருப்பூர் கிழக்கு – தெற்கு மாவட்டக் கழகத்தினர் அனைவரும்

# கரூர் கழக முப்பெரும் விழாவில் அணி திரள்வோம்!

## அமைச்சர் – மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!





திருப்பூர், செப். 15 -

கரூரில் செப்டம்பர் 17 அன்று நடைபெறும் கழகத்தின் முப்பெரும் விழாவில் திருப்பூர் கிழக்கு தெற்கு மாவட்டக் கழகத்தினர் அனைவரும் கரூரை " நோக்கி அணி திரள்வோம் என்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளருமான மு.பெ.சாமிநாதன், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளரும், மாநகராட்சி 4ம் மண்டல தலைவருமான இல.பத்மநாபன் ஆகியோர் அறிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 15, பண்பாட்டுத் துறையில் பகுத்தறிவு, சமத்துவம், பொருளாதாரத் துறையில் சமதர்மம், அரசியலில் ஜனநாயகம் என்ற கோட்பாட்டுடன், அடுத்த தேர்தலை அல்ல, அடுத்த தலைமுறையைப் பற்றி சிந்திக்கின்ற இயக்கமாம், பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் செப்டம்பர் 16, பாராட்டி போற்றி வந்த பழமைலோகம், ஈரோட்டு பூகம்பத்தால் இடியுதுபார் என்று தலைவர் கலைஞரால் கொண்டாடப்பட்ட, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 17, ஆக இவை மூன்றையும் கழகம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடி வருகிறது. விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பெயரில் விருதுகள் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு செப்டம்பர் 17 அன்று கரூர் மாநகரத்தில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. முப்பெரும் விழாவில் கழக உடன் பிறப்புக்கள் அனைவரையும் ஒருசேர ஒரே இடத்தில் பார்ப்பதற்காக ஆவலோடு காத்திருக்கிறேன் என்ற கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று,

திருப்பூர் கிழக்கு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கழக, கிளைக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் பொதுமக்களும் கலந்து கொள்ளும் வகையில் முப்பெரும் விழாவை சிறப்பிக்க கரூர் மாநகர் நோக்கி அணி திரள்வோம் என்று தங்களது அறிக்கையின் வாயிலாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## 24 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**மாஸ்டர் தமிழ்ப்பித்தன் (எ) ம.வேலுச்சாமி**

(மாநில தொண்டரணிச் செயலாளர், தி.மு.க.)

15.9.2001 அன்று கழகத் தலைவரிடம் பதக்கம் பெற்ற மகிழ்ச்சியில் திளைத்த எங்கள் இதய தெய்வத்திற்கு நினைவஞ்சலி!

மகன்

**வேல்.உமாகாந்த்** துணைச் செயலாளர்,

மாநில பொறியாளர் அணி

### திருப்பூர் மத்திய மாவட்டக் கழகத்தினர்

# கழக முப்பெரும் விழாவில் பெருமளவில் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்,ஏ,. அறிக்கை!



திருப்பூர், செப். 15 –

கரூரில் செப்டம்பர் 17 அன்று நடைபெறும் கழகத்தின் முப்பெரும் விழாவில் திருப்பூர் மத்திய மாவட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளரும், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து, அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்த ஆற்றலாளர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 15, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் செப்டம்பர் 16, பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாம் செப்டம்பர் 17, ஆக இவை மூன்றையும் கழகம் ஒவ்வொரு ஆண்டும் முப்பெரும் விழாவாக கொண்டாடி வருகிறது. விழாவில் பெரியார் விருது, அண்ணா விருது, கலைஞர் விருது, பாவேந்தர் விருது, பேராசிரியர் விருது, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் பெயரில் விருதுகள் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட மாடல் நாயகர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு செப்டம்பர் 17 அன்று கரூர் மாநகரத்தில் கழகத்தின் முப்பெரும் விழா நடைபெறவுள்ளது. முப்பெரும் விழாவில் கழக உடன் பிறப்புக்கள் அனைவரையும் ஒருசேர ஒரே இடத்தில் பார்ப்பதற்காக ஆவலோடு காத்திருக்கிறேன் என்ற கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையை ஏற்று திருப்பூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, வார்டு கழக, கிளைக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக செயல் வீரர்கள் அனைவரும் பங்கேற்று, பொதுமக்களும் அதிக அளவில் கலந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.




தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்ற தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் முப்பெரும் விழா பணிகள், ஓரணியில் தமிழ்நாடு உள்ளிட்ட கழக ஆக்க பணிகள் குறித்து விளக்கி சிறப்புரை ஆற்றினார். நிகழ்வில் கே. மனோகரன், தேர்தல் பார்வையாளர்கள் டி.எம்.அரியப்பன், நரேஷ் எவரெஸ்ட் குமார் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட தி.மு.க.வினர் பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மாஸ்டர் தமிழ்ப்பித்தன்**

**செப்டம்பர் 15 (2001)**



கழகத்தில் சாதாரண தொண்டராக இருந்து படிப்படியாக உயர்ந்து தி.மு.க. மாநில தொண்டர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று சிறப்புற பணியாற்றியவர்.

2001ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று சிறந்த தொண்டர் அணியின் விருதினை தலைவர் கலைஞர் அவர்கள் கையால் பதக்கம் பெற்றவர்.

தன் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் திருக்கரத்தால் விருதினைப் பெற்று அளவற்ற மகிழ்ச்சியில் நின்ற மாஸ்டர் தமிழ்ப்பித்தன் அதே இடத்தில் தன்னுயிரை இழந்தார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**